
உ

பாம்பன் ஸ்ரீ குமாரகுருதாச சுவாமிகள் அருளிச் செய்த

# சண்முக கவசம்




திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

ஸ்கந்த சஷ்டி இலவச வெளியீடு

திரு. K. S. நரசிம்மமுதலியார், B. A., B. L, I. A S.
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை.

திரு. P. R. பக்ரி சங்கர், M. A., B. L.,
துணை ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
மதுரை.

திரு. R. அர்ஜுனன், B. A.,
உதவி ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
திருநெல்வேலி

திரு. K. S. நரசிம்மமுதலியார், B. A., B. L, I.A S.

ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

சென்னை.

திரு. P. R. பக்ரி சங்கர், M. A., B. L.,

துணை ஆணையாளர்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,

மதுரை.

திரு. R. அர்ஜுனன், B. A.,

உதவி ஆணையாளர்,

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

திருநெல்வேலி

வெளியீடு எண்: 8

உ

முருகன் துணை

பாம்பன் ஸ்ரீ குமரகுருதாச சுவாமிகள்
அருளிச் செய்த

# சண்முக கவசம்



திருச்செந்தூர்
ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்
ஸ்கந்த சஷ்டி இலவச வெளியீடு

1969

உ

முருகன் துணை

# அணிந்துரை

அகராதி னகாராந்தந் தொடக்கமாய் வரும் முப்பது செய்யுட்கள் கொண்ட இச்சண்முக கவசம் என்னும் மந்திர மறையைத் திருவிராமேச்சுரத்தைச் சார்ந்த பாம்பன் ஸ்ரீமத் **குமரகுருதாச சுவாமிகள்** இயற்றி தமக்குற்ற ஓரல்லலினின்று நீங்கினர். இதனை வாற்சல்லிய விசுவாசத்துடன் நாளொன்றுக்கு ஆறுமுறை படிப்பவர் எத்தகைய துன்பினின்றும் விடுதலையடைவர். முடிவில் மூத்தி யின்பத்தையும் பெறுவர். இரவில் வழி நடக்கும்போதும், வனத்திற் செல்லும்போதும் நோயால் வருந்தும்போதும், பயங்கரமான துன்பத்தில் அல்லல் உறும்போதும், பேய் பிசாசுகளால் தொல்லையுறும் போதும், மரண காலத்திலும் இக்கவசம் படிக்கப்படுமாயின் துன்பமெலா மொழிந்து நன்மையே உண்டாகுமென்க. நினைத்த காரியமும்அனுகூல்மாகும். ஐயமில்லை.

**குறிப்பு:-** கவசச் செய்யுட்களில் சிலவற்றை மட்டும் கூறல் கூடாது. இடையில் யாருடனும் பேசுதலும் கூடாது. முன் பின் மாறிப் படித்தலுமாகாது. பாராயணம் முடிந்தும் கற்பூர தீபம் ஏற்றல் விசேடம். காலையிலும், மாலையிலும் பகைகடிதலையும் குமார ஸ்தவத்தையும் ஒருமுறை வாசித்தல் வேண்டும். கவச பாராயணத்திற்கு முன்பும் மேற்கண்ட இரண்டு நூல்களையும் ஒருமுறை வாசித்தல் வேண்டும். கவச

பாராயணம் ஆறு முறை செய்தலே விசேடம். இப்படிப் பாடிப் பலனடைந்தாரும் பலர் என்க. அவருள்:-

1. பெங்களூர் வாசியான **சண்முகம் பிள்ளை** யென்னு மொருவர், இராசாங்கத்துத் தமது உத்தியோக முறையில் தவறிழைத்தனரெனக் குற்றஞ்சாற்றப்பட்டபோது சென்னை வாசியான **ச. மா. சண்முகம் பிள்ளை** யென்பார் சண்முக கவசத்தைநாளொன்றுக்கு 6 முறைபாராயணம் செய்யுமாறு பெங்களூர் **சண்முகம்பிள்ளைக்கு** அறிவிக்கஅவரும்அப்படியே செய்வாராயினர். அக்குற்ற விசாரணைக் காலத்தும் அவர், கவசத்தையுட்புலத்தே கமனஞ் செய்து கொண்டு நின்றார். இக்குற்றச் சாட்டு, குற்றமாகமாட்டாவென்று நியாயாதிபதி அதனைத் தள்ளி விட்டனர். கவசகமனத்தால் அந்தத் தீர்ப்பையறியாது அங்கேயே நின்றிருந்த **சண்முகம் பிள்ளையின்** கையினைச் சென்னை **சண்முகம் பிள்ளை** பற்றிக் கொண்டு"**விடுதலையாயிற்று வாரும்**"எனஅழைத்துச் சென்று நீதி மன்றத்தின் வாயிலில் விட்டு மறைந்தனர். மறைதலும் விடுதலையடைந்த பெங்களூர் **சண்முகம் பிள்ளை** சென்னையில் இருந்த **சண்முகம் பிள்ளையை** நீர் இப்பெங்களூருக்கு வந்து இக்காரியம் செய்தீரோ? என்று எழுத்து மூலமாகக் கேட்டனர். யான் அவ்வாறு செய்ததில்லையென சென்னை **சண்முகம் பிள்ளை** பதில் கூறினர். பின்னர் இரண்டு **சண்முகம் பிள்ளையும்** உண்மையுணர்ந்து கவசத்தின் பெருமையையும் இறைவனது திருவருட் செயலையும் பலருக்கு முணர்த்திப் பன்முறையும் மகிழ்வாராயினர்.

2. சிதம்பரம் வண்டிக்காரத் தெருவில் வசித்து வந்த 40 வயது **செல்வத்தம்மாளைப்** பாம்புக் கடித்து மாரடைப்பும் மூர்ச்சையும் ஏற்பட்டு விட்டது. (குரோதன ஆண்டு புரட்டாசித் திங்கள் 10-ம் நாள் மாலையில்) கவச பாராயணம் செய்ததும் விஷம் இறங்கி விட்டது. அம்மையாரும் பிழைத்தனர்.

3. சென்னைமயிலைவாசியான **T- மாணிக்கம் செட்டியாரவர்கட்கு** 1944-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இருதய சம்பந்தமான நோய் கண்டு பேரிடருற்றனர். **செட்டியாரவர்கள் சண்முக கவசத்தைப் பாராயணம்** செய்யத் தொடங்கினர். சில நாட்களில் நோய் முற்றிலும் நீங்கப் பெற்றுச் சுகமடைந்தனர். இன்று பெரு வணிகராய்த் திகழும் இவர்களும் **சண்முக கவசப் பாராயணத்தை** அனுதினமும் விடாது கமனம் செய்து வருகின்றார்கள்.

4. எல்லாவற்றைக் காட்டிலும் இதனை இயற்றிய **பாம்பன் அடிகளுக்கு** 27—12—1923 வியாழனன்று காலை சென்னை, தம்புச் செட்டித் தெருவில் ஒரு குதிரை வண்டி சக்கரம் ஏறி இடது கணுக்கால் முறிந்துபோகவே சுவாமிகள் ஜெனரல் ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டனர். சுவாமிகள் இளமையிலிருந்தேஉப்புபுளியைநீக்கியஆகாரமேஉட்கொண்டிருந்ததாலும், வயது முதிர்ந்திருந்தமையாலும் மருத்துவர்கள் முறிந்தகால்கூடுவது அரிது என்றும், முறிந்த எலும்பு வரை காலைத் துண்டித்து விடுவது நலம் என்றும் முடிவு செய்தனர். ஆனால் சுவாமிகள் அதனைத் தடுத்து **சண்முக கவசத்தைப் பாராயணம்** செய்யுமாறு பணித்தனர். சுவாமி

களருகில் இருந்து மூவர் கவச பாராயணம் செய்தனர். அதில் திருவல்லிக்கேணி **சின்னசாமி ஜோதிடர்** மட்டும் அப் பாராயணத்தின் போது சுவாமிகளது முறிந்த கால்களை இரு புறமும் இரு வேல்கள் பூட்டி ஒரு வேல் தாங்குவதாகத் தினமும் கண்டு கால் கூடுவது மறிந்தனர். பின் கவச பாராயணத்தால் சுவாமிகளது முறிந்த கால் பொருந்தி நடக்கலாயினர். ஆங்கில மருத்துவர் அதிசயித்தனர். இந்நிகழ்ச்சியையே சுவாமிகளது சீடர்கள் **"மயூர வாகன சேவன விழா"** என்று இன்றும் கொண்டாடுகின்றனர். இப்படிக் கவச பாராயணத்தால் பலனுற்றோர் மிகப் பலர். விரிக்கிற் பெருகும் என விடுத்தனம்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாகிய திருச்செந்தூர் முருகப்பெருமானின் ஸ்கந்த சஷ்டிப் பெருந் திருவிழாவின் நினைவாக வெளியிடப்பெறும் இந்த இலவச வெளியீட்டை அன்பர்கள் பெற்று உளங்குழைந்து ஓதித் திருவருள் பெற்று இன்புறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**ஆலய நிருவாகிகள்.**

# பஞ்சாமிர்த வண்ண வரலாறு

இந்நூலாசிரியரான **ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகளும்** திருவனந்தபுரம் **ந. சுப்பிரமணிய பிள்ளை** யெனும் பெயரிய சிவநேசச்செல்வரொருவரும் பாம்பனெனும்பதிக்கட் சந்தித் திருந்த வோர் பகலில் சுவாமிகளைக் காண வந்தவர்களு ளொருவர் தமக்குப் பாடமாயிருந்த சிற்றின்ப வண்ண மொன்றினை யினிமையாகப் பாடினர். அதனைக் கேட்டிருந்த மேற்படி பிள்ளை, நங்கடவுளாகிய குமார சுவாமியின் பேரில் சுவாமிகளும் வண்ணம் பாடவேண்டுமென்றதிவ்விய வேண்டு கோளை யங்கீகரித்து, சுவாமிகள் கலியுகம் 4993 ஆம் ஆண் டில் நிகழ் கரவருடத்துக் கார்த்திகைமதி 242 சேய்வாரத்தில் இப் பஞ்சாமிர்த வண்ணத்தைப்பாடி முடித்தனர். இதனைப் பக்தியோடும் ஒருமுறை பாடி முடிப்போர்க்கு குமாரக் கடவுட்குப் பஞ்சாமிர்தத்தால் ஐந்தபிடேகஞ் செய்த பலன் கிடைக்குமென்பது சரதம். அங்ஙனம் பல முறையாயிற் பலனும் அத்துணையேயாம்.

சந்தனசயிலமென்னுந் **திருச்செந்தூர்ஸ்தா**னிகருளொரு வராய் ஏறக்குறைய 45 வயதுடையராய் ஈ**, அனந்த சுப்பைய** ரென்னும் பெயரினரா யிராநின்ற வேதியனார் சென்ற காலயுத்தி வருடத்து மார்கழி மாதத்திலே தமது புத்தகப் பெட்டியிலிருந்து இப்பஞ்சாமிர்த வண்ணப் பிரதி யொன்றனைக் கண்டெடுத்துப் படித்துப் பார்த்தனர். இது,

சொல்லானும் பொருளானும், பாட்டானும் இனிமையா யிருக்கின்றதேயென்பது நுதலி, இதனைப்பாராயணஞ் செய்ய வேண்டுமென நினைந்தனர். வேலூரைச் சார்ந்த வாட் கொடைக் கிராம வாசியாயிருந்துதிருச்செந்தூர்சென்றிருந்த 55 வயதுடைய **வ. ந. சுப்பிரமணிய ஐயரெனும்** பெயரிய வேதியர், அப்பாராயணத்தில் யானுமிருக்கக்கடவே னென்றனர். கந்தக் கடவுளதுசெந்நோன்ருட்பத்தியிலீடுபடு மெய்யுணர்வு முதலிய மேன்குணங்கள் வாய்ந்த இவ்விரு வரும் அப்படியே செய்வோமென்று அவ்வூர்க் கவுண்டர் மண்டபத்திற்கு மாலைப்போது தோறும் போந்து வைகிப் பாராயணஞ் செய்து வருதலை உடனிருந்து செவிமடுத்து வருபவரும் தமதுடல் பொருள் ஆவியெல்லாம் முருகப் பெருமானுக்கே சமர்ப்பித்து நிற்பவரும் 80 வயதின் மிக்க வரும் **முத்தம்மை** யென்னும் பெயருடையருமாகிய ஒரு பெரும் புண்ணியவதியாருடைய கண்கள்காணுமாறு சென்ற சித்தார்த்திவருடத்துச் சித்திர மாதத்தொரு குருவாரத் திரவு 6-கடிகைக்குமேல் 20, 22 பிராயமுடையாராய்க் காசிச் சிறு செம்பொன்று கையிலுடையாராய் ஒருவர் வந்தனர். பின்றை, எனக்கும் இப்பாராயணஞ்செய்வார்க்கும்இடையே சென்று சிறிது மறைவாக நின்று இவ்வண்ணத்தைக் கேட்டு நிற்கும் இவர் யாரோ புதியராயிருக்கின்றனர்; யாவரேயா யினும் இங்ஙன நன்கிருந்து கேட்கலாமே; அவ்வாறு செய்யா ததென்? என்று அவ்வம்மையார் சிந்தித்து நோக்கியவுடன் அவர் மறைந்தனர். இவ்விவரத்தைப் பாராயண முடிவில் அவ்வேதியரிருவருக்கும் அவ்வம்மையார் கூறிவிட்டு வழக்கம்

போலஅன்ஞரோடுதிருக்கோயில்போந்துசெந்திலாண்டவனை தரிசித்து விடை பெற்றுத் தமதிருக்கையையடைந்தனர்.

மறு நாளாகிய சுக்கிரவாரத்திரவு 23-கடிகைக்கு மேலே முத்தம்மையா ரிருக்கையினை முன் மறைந்து சென்ற திருமேனிப்பரமரடைந்துஅவரை நோக்கி, நீ நேற்று என்னைப் பார்த்து இவர் யாரோ புதியரென் றெண்ணலுற்றனை யன்றோ: யான் இவ்வூரே: என்னுடன் வருவையேல் இருப்பிடங் காட்டுவேனென்றனர். அவ்வம்மையாரும் அதுகாண்குவலென ஆவலோடெழுந்து அவரோடு வீதியினையடைந்தனர். ஆண்டு நிற்கின்ற ஓரிளம் பருவப் பெண்ணேடும் அப்பரமர் செல்லுதலைக் கண்ணுற்ற அவ்வம்மையாரும் பின்றொடர்ந்து சென்று கலியாண மண்டபத்தை அடுத்து நிற்கும் அவர்கள் பக்கலி னின்றனர். ஆண்டுப்பரமர் கிழவீ! கவுண்டர் மண்டபத்திற்பாராயணஞ்செய்யப்படுகின்றபஞ்சாமிர்த வண்ணம் இயன்றளவில் இன்னேசையெழப் பாடப்படல் வேண்டும்; நீ அவர்கட்குச்சொல். அவ்வண்ணம் எனக்குப் பிரீதியாயுளது; அஃதெங்கே பாராயணஞ் செய்யப்படுமோ அங்கே யான் வருவேனிருப்பேனுகலின் அம்மண்டபத்திற்கு வந்தேன்: என்னுடைய இருக்கை, இக்கலியாண மண்டபமும் வசந்த மண்டபமுங் கோவிலுமாகு மென்று ஆங்குள்ள வவற்றைச் சுட்டிக் காட்டி அவ்விளம் பருவப் பெண்ணேடும் மறைந்தருளினர். முத்தம்மையார், ஆஅ! பெருமானே! பெருமானே யென்று கூவி அவ்விடத்திலே பஞ்சாங்க நமற்காரம் புரிந்தெழுந்து பன்முறையிங் கும்பிட்டு இருப்பிடமடைந்து கண்படை கொள்ளாதிருந்து விடிந்த பின்றையிறை

வனைத் தொழுது போந்து அவ்வேதியரிருவரையுங் கண்ணுற்று இறைவன் கட்டளையை வெளியிட்டனர். அது செவிமடுத்தபத்தசிரோமணிகளாயஅவ்விருவரும்விம்மிதமடைந்து வண்ண பாராயண நிமித்தந் திவ்விய திருவடித் தாமரைகள் புழுதியணையப் பிராட்டியோடு பூமிசை நடந்து வந்திருளிய பெருங்கருணைத் தடங்கடலுக்கு அனேக வந்தன மனேகவந்தனமென்று கூறி வணங்கினர். அவருள் அனந்த சுப்பையர், பாராயணவண்ணப் பிரதியைப் பூசையில்வைத்துக்கொண்டு வேறு பிரதியொன்று பாராயணத்திற்குத் தேடிக் கொள்வாராயினர்.

இவ்விவர முணர்ந்த பிரமஸ்ரீ **பிராமண சன்னியாசியாரொருவர்**, தமது மௌன நிலை கெடாது மானசிகமாக அவ்வண்ண பாராயணத்தை மேலை வசந்த மண்டபக்கணிருந்து சின்னாட்களாகச் செய்து வருங்கால் ஓரமையம், சிறு பிராயத் திருவுருவுடையானொருவன் காதுகளிற் குண்டலங்கள் பிரகாசிக்க எதிரினிற்கக் கண்டு அவனடி மலரை இனிது வணங்கினர். உடனே அவன் மறைந்தருளினன். இவ்வாற்றானும் இவ்வமுத வண்ணத்தை நன்கு மதித்துநடப்பவர், செவ்வேட்பரமன் திருவுளத்திற்குப் பிரீதியுடையவராவரென்பதறியக் கிடக்கின்றதால்.

குமரகுருபரன் றிருவடிவாழ்க.

ஓம் குஹப்பிரஹ்மணே நம:

# குமாரஸ்தவம்

ஓம் ஷண்முக பதயே நமோ நம:
ஷண்மத பதயே நமோ நம:
ஷட் [1]க்ரீவ பதயே நமோ நம:
ஷட்கிரீட பதயே நமோ நம:
ஷட்கோண பதயே நமோ நம:
ஷட் [2]கோச பதயே நமோ நம:
நவநிதி பதயே நமோ நம
சுபநிதி பதயே நமோ நம:
நரபதி பதயே நமோ நம:
சுரபதி பதயே நமோ நம:
நடச்சிவ பதயே நமோ நம:
ஷடக்ஷர பதயே நமோ நம:
கவிராஜ பதயே நமோ நம:
தபராஜ பதயே நமோ நம:
இஹபர பதயே நமோ நம:
புகழ்முனி பதயே நமோ நம:
ஜய ஜய பதயே நமோ நம:
நய நய பதயே நமோ நம:
[3]மஞ்சள பதயே நமோ நம:
குஞ்சரீ பதயே நமோ நம:

---

[1]க்ரீவம்-கழுத்து. [2]கோசம்-நூல். [3]மஞ்சுளம்-அழகு.

ஓம் வல்லீ பதயே நமோ நம:
மல்ல பதயே நமோ நம:
அஸ்த்ர பதயே நமோ நம:
சஸ்த்ர பதயே நமோ:
ஷஷ்டி பதயே நமோ நம:
இஷ்டி பதயே நமோ நம:
அபேத பதயே நமோ நம:
சுபோத பதயே நமோ நம:
(வ்)வியூஹ பதயே நமோ நம:
மயூர பதயே நமோ நம:
பூத பதயே நமோ நம:
வேத பதயே நமோ நம:
புராண பதயே நமோ நம:
(ப்)பிராண பதயே நமோ நம:
பக்த பதயே நமோ நம:
முக்த பதயே நமோ நம:
அகார பதயே நமோ நம:
உகார பதயே நமோ நம:
மகார பதயே நமோ நம:
விகாச பதயே நமோ நம:
ஆதி பதயே நமோ நம:
பூதி பதயே நமோ நம:
குமார பதயே நமோ நம:
அமார பதயே நமோ நம:

**குமாரஸ்தவம் முற்றிற்று.**

உ

ஓம் குஹப்பிரஹ்மணே நம:

பாம்பன்: ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள்

அருளிச்செய்த

# பகை கடிதல்

திருவளர் சுடருருவே, சிவைகரம் அமருருவே,
அருமறை புகழுருவே, யிறவர்கள் தொழுமுருவே,
இருள்தபும் ஒளியுருவே யெனநினை யெனதெதிரே,
குருகுகண் முதன்மயிலே, கொணர்தி யுனிறைவனையே.

மறைபுகழ் இறைமுனரே, மறைமுதல் பகருருவே,
பொறைமலி யுலகுருவே, புனநடை தருமுருவே,
இறையிள முகவுருவே, யெனநினை யெனதெதிரே,
குறைவறு திருமயிலே, கொணர்தியு னிறைவனையே.

இதரர்கள் பலபெயர்வே, யிவணுறையென தெதிரே,
மதிரவிபல வெனதேர், வளர்சர ணிடையெனமா,
சதுரொடு வருமயிலே, தடவரை யசைவுறவே,
குதிதரு மொருமயிலே கொணர்தியு னிறைவனையே.

பவநடை மனுடர்முனே, படருறு மெனதெதிரே,
நவமணி நுதலணியோர், நகைபல மிடறணிமால்,
சிவணிய திருமயிலே, திடனொடு நொடிவலமே,
குவலயம் வருமயிலே, கொணர்தியு னிறைவனையே.

அழகுறு மலர்முகனே, அமரர்கள் பணிகுகனே,
மழவுரு வுடையவனே, மதிநனி பெரியவனே,
இழவில ரிறையவனே, யெனநினை யெனதெதிரே,
குழகதுமிளிர் மயிலே, கொணர்தியு னிறைவனையே.

இணையறு மறுமுகனே, இதசசி மருமகனே,
இணரணி புரள்புயனே, யெனநினை யென்றெதிரே,
கணபண வரவுறுமே கலைவிற லெழுதருமோர்,
குணமுறு மணிமயிலே, கொணர்தியு னிறைவனையே.

எளியவ, என் இறைவ, குகாஎன நினை யென்றெதிரே,
வெளிநிகழ் திரள்கணை மீன்மிளிர்சினையென மிண்டவான்,
பளபள வெனமினுமோ, பல்சிறை விரிதருநீள்,
குளிர்மணி விழிமயிலே, கொணர்தியு னிறைவனையே.

இலகயில் மயில் முருகா, வெனநினை யென்றெதிரே,
பலபல களமணியே, பலபல பதமணியே,
கலகல கலவெனவா, கவினொடு வருமயிலே,
குலவிடு சிகைமயிலே, கொணர்தியு னிறைவனையே

இகலறு சிவகுமரா, வெனநினை யெனதெதிரே,
சுகமுனிவரர் எழிலோர், சுரர்பலர் புகழ்செயவே,
தொகுதொகு தொகுவெனவே, சுரநட மிடுமயிலே,
குகபதி யமர்மயிலே, கொணர்தியு னிறைவனையே.

கருணைபெய் கனமுகிலே கடமுனி பணி முதலே,
அருணைய னரனெனவே, யகநினை யென்றெதிரே,
மருமல ரணிபவுவே, மருவிடு களமயிலே,
குருபல வளிர்மயிலே, கொணர்தியு னிறைவனையே.

பகை கடிதல் முற்றிற்று.

இத்திருப்பதிகத்தைக் காலை மாலை பக்திபூர்வமாகப் பாடுநர்
செவ்வேட்பெருமானை மயிலின்மீது தரிசிப்பர்,
பகையை வெல்வர்.

உ

ஓம் குமார குருப்யோ நம :

# சண்முக கவசம்

## அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டமாய் அவனியாகி யறியொணாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகளறு தெய்வமாகி
எண்திசை போற்ற நின்ற என்னருள் ஈசனான
திண்திறல் சரவணத்தான், தினமும்என் சிரசைக்காக்க. 1

ஆதியாங் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக்காக்க
தாதவிழ் கடப்பந்தாரான் தாளிருநுதலைக் காக்க
சோதியாந் தணிகையீசன் துரிசிலா விழியைக்காக்க
நாதனும் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க. 2

இருசெவி களையுஞ் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல்முழுது நற்குமரன் காக்க
துரிசறு கதுப்பையானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரிதன்னைச் சிவசுப்பிர மணியன் காக்க. 3

ஈசனாம் வாகுலேயன் எனது கந்தரத்தைக் காக்க
தேசுறு தோள்விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீராறுயுதன் காக்க என்தன்
ஏசிலா முழங்கைதன்னை யெழிற்குறிஞ்சிக் கோன் காக்க. 4

உறுதியாய் முன்கைதன்னை உமையிள மதலை காக்க
*தறுகணேறிடவே என்கைத் தலத்தைமா முருகன்காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கரவிரல்கள் பத்தும்
பிறங்குமால்மருகன் காக்க பின்முதுகைச்சேய் காக்க. 5

---

*தறுகண்—அஞ்சாத்தன்மை.

ஊண்ணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினையங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க. 6

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்† சகனமொ ரிரண்டும், அரன் மகன் காக்க் காக்க
விஞ்சிடுபொருட்காங்கேயன் விளரடித்தொடையைக் காக்க
செஞ்சரணே சவாசான் திமிருமுன் தொடையைக் காக்க. 7

ஏரகத்தேவன் என் தாள் இருமுழங்கா லுங் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடிரண்டு நிகழ்பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க. 8

ஐயுறு மலையன் பாதத்து அமர் பத்து விரலுங் காக்க
பையுறு பழநிநாத பரன் அகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதிவிமல சண்முகவன் காக்க
தெய்வநாயக விசாகன் தினமும் என்னெஞ்சைக் காக்க. 9

ஒலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப்ரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவையானாலும்
கிலிகொளவென்னை வேல்காக்க கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ர வருத்திடாது அயில்வேல் காக்க. 10

ஓங்கிய சீற்றமே கொண்டு உவணி வில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகந் தடி பரசு ஈட்டியாதி
பாங்குடை யாயுதங்கள் பகைவர் என்மேலே யோச்சின்
தீங்குசெய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்க காக்க. 11

---

† ஜகநப்ரதேசம்.

ஔவிய முளர் ஊன் உண்போர் அசடர பேய் அரக்கர்புல்லர்
தெவ்வர்கள் எவரானாலும் திட்முடனெனைமற் கட்டத்து,
அவ்வியே விருவிராயில் சராசரமெல்லாம் புரக்கும்
*கவ்வுடைச் சூடசண்டன் கையயில் காக்க காக்க. 12
ங
கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலி மாயானை
கொடிய கோளுய் குரங்கு கோலமார்ச்சாலம் சம்பு
நடையுடை யெத்திறலேனு நானிடர்ப் பட்டிடாமல்
சடுதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க. 13
ங
ஙகரமே போற்றழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக்காலி செய்யான் ஏறு ஆலப்பல்லி
நகமுடை ஓந்தி பூரான் அளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையால் எற்கோர் ஊறிலாது ஐவேல் காக்க. 14
ச
சலத்திலுய்வன் மீனேறு தண்டுடைத் திருக்கைமற்றும்
நிலத்திலும் சலத்திலுந் தான்நெடுந்துயர் தரற்கேயுள்ள
குலத்தினல்நான் வருத்தங்கொண்டிடாது அவ்வவ்வேளை
பலத்துடனிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15
ஞ
ஞமலியம் பரியன் கைவேல் நவக்கிரகக் கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்தசூலை யாக்கிரண ரோகம்
திமிர்கழல் வாதம் சோகை சிரமடி கர்ணரோகம்,
எமையணுகாமலே பன்னிருபுயன் சயவேல் காக்க. 16
ட
டமருகத் தடிபோனைக்குந் தலையிடி கண்டமாலை
குமுறு விப்புருதி குன்மம் குடல்வலி ஈழை காசம்
நிமிரொணு திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேகமெல்லாம்
எமையடையாமலே குன்றெறிந்தவன் கைவேல் காக்க. 17

*கவ்வு—'கயவு' என்பதின் விகாரம், கயவு—பெருமை

இணக்கமில்லாத புத்தவெரிவு மாசுரங்கள் கை கால்
முணக்கவே குறைக்குங் குஷ்டம் மூல வெண்முளை தீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலமென் றறையுமிந்தப்
பிணிக்குலம் எனையாளாமல், பெருஞ்சத்திவடிவேல் காக்க. 18

தவனமாரோகம் வாதம் சயித்தியம் அரோசகம் மெய்
சுவறவே செய்யு மூலச்சூடு யிளைப்பு வுடற்றி விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவாதங்கள் சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் திணிவேல்
காக்க. 19

நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடுகருமை வெண்மையாகுபஃதொழுநோய் கக்கல்
இமைக்குமுன் னுறுவலிப்போடு எழுபுடைப் பகந்தராதி
இமைப்பொழுதேனும் என்னை யெய்தாமலருள்வேல்
காக்க. 20

பல்லது கடித்து மீசை படபடென்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினும் கரியமேனி யெமபடர் வரினு மென்னை
துல்லையில் தார்ரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க. 21

மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை சலத்தின்மீதும் சாரிசெய் யூர்திமீதும்
விண்ணிலும் பிலத்தினுள்ளும் வேறெந்தவிடத்துமென்னை
நண்ணிவந்தருளார் சஷ்டி நாதன் வேல் காக்க காக்க. 22

யகரமேபோல சூலேந்து நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகர மோடாறு மானோன் தன்கைவேல் நடுவிற் காக்க
சிகரமின் தேவமோலி திகழைமேல் கீழ் வேல் காக்க. 23

ரஞ்சிதமொழி தேவானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சயவேல் கிழக்கில் திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசையின் ஞானவீரன் வேல்காக்க தெற்கில்
எஞ்சிடாக்கதிர் காமத்தோன் இகலுடைக்கரவேல்காக்க. 24

லகரமேபோல் காளிங்கனல் லுடனெளிய நின்று
தகரமர்த்தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழெனை நிருதிதிக்கில் நிலைபெறக்காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயுவினில் குகன் கதிர்வேல் காக்க. 25

வடதிசைதன்னில் ஈசன்மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையில் இருக்கு ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில் கீழ்க்
கிடக்கையில் தூங்கு ஞான்றும் கிரிதுளைத்துளவேல் காக்க. 26

இழந்துபோகாத வாழ்வை ஈயுமுத்தையனார் கைவேல்
வழங்குநல்ஊண் உண்போதும்மால் விளையாட்டின்போது
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சடக்கும்போதும்
செழுங்குணத்தோடேகாக்க திடமுடன் மயிலும் காக்க. 27

இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிகத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலைமுன் எல் ஓம்சிவசாமி காக்க
தெளிநடு பிற்பகற்கால் சிவகுருநாதன் காக்க 28

இறகுடைக் கோழித்தோகைக்கிறை முன்இராவிற் காக்க
திறலுடைச் சூர்புகைத்தே திகழ்பின் இராவிற்காக்க
நறவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னிற்காக்க
மறைதொழு குழகன் எங்கோன் மாறுது காக்க காக்க. 29

இனமெனத் தொண்டரோடும் இணங்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந்தன்னில் சரவணபவனார் காக்க
நனியனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்க வந்தே. 30

சண்முக கவசம் முற்றிற்று.



ஸ்ரீ பூஜை

# பஞ்சாமிர்த வண்ணம்

## 1. பால்

தனந்த தந்தன தனந்தனு
தனந்த தந்தன தனந்தனு
தனந்த தந்தன தனந்தனு
தனந்த தந்தன தனந்தனு

தந்தந் தந்தன தந்தானு
தந்தந் தந்தன தந்தானு
தந்தந் தந்தன தந்தானு
தந்தந் தந்தன தந்தானு

தாந்த தந்தனனு தன தாந்த தந்தனனு
தாந்த தந்தனனு தன தாந்த தந்தனனு

தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தனு
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்தனு-தன தன தன தானு.

இலங்கு நன்கலை விரிஞ்சனோ
டனந்த னுஞ்சத மகன்சதா
வியன்கொ டம்பியர் களும்பொனு
டுறைந்த புங்கவர் களுங்கெடா

தென்றுங் கொன்றைய ணிந்தோனர்
தந்தண் டின்றிர ளுஞ்சேயா
மென்றன் சொந்தமி னுந்தீதே
தென்றங் கங்கணி கண்டோயா

தேந்து வன்படைவேல் வலி சேர்ந்த திண்புயமே
யேய்ந்த கண்டகர்கா ழுடை மூஞ்சி கந்தரமோ

டெலும்பு றுந்தலை களுந்து ணிந்திட
வடர்ந்த சண்டைக டொடர்ந்துபே
யெனுங்கு ணுங்குக ணிணங்க ளுண்டரன்
மகன்பு றஞ்சய மெனுஞ் சொலே
—களமிசையெழுமாறே, (1)

துலங்கு மஞ்சிறை யலங்கவே
விளங்க வந்தவொர் சிகண்டியே
துணிந்தி ருந்துயர் கரங்கண்மா
வரங்கண் மிஞ்சிய விரும்புசூர்

துன்றுந் தண்டமொ டம்பீர்வாள்
கொண்டண் டங்கவி னின்றாடே
சுண்டும் புங்கம ழிந்தேலா
தஞ்சும் புண்டசு ரன்சூதே

சூழ்ந்தெ ழும்பொழுதே கரம் வாங்கியொண்டிணிவே
றூண்டி நின்றவனே கிளை யோங்க நின்றுளமா

துவந்து வம்பட வகிர்ந்து வென்றதி
பலம்பொ ருந்திய நிரஞ்சனு
சுகங்கொ ளுந்தவர் வணங்கு மிங்கித
முகந்த சுந்தர வலங்க்ருதா
— அரிபிரமருமேயோ (2)

அளைந்து சந்தத மறிந்திடா
தெழுந்த செந்தழ லுடம்பினு
ரடங்கி யங்கமு மிறைஞ்சியே
புகழ்ந்த வன்றுமெய் மொழிந்தவா

அங்கிங் கென்பத றுந்தேவா
யெங்குந் துன்றிநி றைந்தோனே
யண்டுந் தொண்டர்வ ருந்தாமே
யின்பந் தந்தரு ளுந்தாளா

ஆம்பி தந்திடுமா மணி பூண்ட வந்தனையா
வாண்ட வன்குமரா வெனை யாண்ட செஞ்சரணு

அலர்ந்த விந்துள வலங்க லுங்கடி
செறிந்த சந்தன சுகந்தமே
யணிந்து குன்றவர் நலம்பொ ருந்திட
வளர்ந்த பந்தனை யெனும் பெணுள்
— தனையணைமணவாளா (3)

குலுங்கி ரண்டுமு கையுங்களா
ரிருண்ட கொந்தள வொழுங்கும்வேல்
குரங்கு மம்பக மதுஞ்செவா
யதுஞ்ச மைந்துள மடந்தைமார்

கொஞ்சும் புன்மொழி லுங்காலோ
ருஞ்சண் டன்செய லுஞ்சூடே
கொண்டங் கம்பட ருஞ்சீழ்நோ
யண்டந்தந் தம்வி ழும்பாழ்நோய்

கூன்செ யும்பிணிகால் கரம் வீங்க ழுங்கலும்வாய்
கூம்ப ணங்குகணேய் துயர் சார்ந்த புன்கணுமே

குயின்கொ ளுங்கடல் வளைந்த விங்கனே
யடைந்தி டும்படி யினுஞ்செயேல்
குவிந்து நெஞ்சமு ளணைந்து நின்பத
நினைந்து யும்படி மனஞ்செயே
— திருவருண்முருகோனே (4)

## 2. தயிர்

தனத்தன தந்தன தனத்தன தந்தன
தனத்தன தந்தன தனத்தன தந்தன
தா தனனு தனனு தனனு
தனந்த தந்தன தனந்த தந்தன
தனந்த தந்தன தனந்த தந்தன
தா தனனு தனனு தனனு—தன தன தன தானு.

கடித்துண ரொன்றிய முகிற்குழ லுங்குளிர்
களைப்பிறை யென்றிடு நுதற்றில கந்திகழ்
கா சுமையா விளமா மகனே

களங்க விந்துவை முனிந்து நன்கது
கடந்து விஞ்சிய முகஞ்சி றந்தொளி
கா லயிலார் விழிமா மருகா
— விரைசெறியணிமார்பா (1)

கனத்துயர் குன்றையு மிணைத்துள கும்பக
லசத்தையும் விஞ்சிய தனத்திசை மங்கைகொள்
கா தலனுன் முகனு டமுதே

கமழ்ந்த குங்கும நரந்த முந்திமிர்
கரும்பெனுஞ்சொலை யியம்பு குஞ்சரீ
காவலனே குகனே பரனே
— அமரர்கடொழும்பாதா, (2)

உடுக்கிடை யின்பணி யடுக்குடை யுங்கன
வுரைப்புயர் மஞ்சுறு பதக்கமொ டம்பத
வோ வியநூ புரமோ திரமே

ருயர்ந்த தண்டொடை களுங்க ரங்களி
லுறும்ப சுந்தொடி களுங்கு யங்களி
லூ ரெழில்வா ரொடுநா சியிலே
— மினுமணிநகையோடே (3)

உலப்பறி லம்புக மினுக்கிய செந்திரு
வுருப்பணி யும்பல தரித்தடர் பைந்தினை
யோ வலிலா வரணே செயுமா

ஞெருழுங்கு றும்புன மிருந்து * மஞ்சுல
முறைந்த கிஞ்சுக நறுஞ்சொ லென்றிட
வோ லமதே யிடுகா னவர்மா
— மகளெனுமொருமானும், (4)

மடக்கொடி முன்றலை விருப்புடன் வந்தந்தி
வனத்துறை குன்றவ ருறுப்பொடு நின்றிள
மா னினியே கனியே யினிநீ

வருந்து மென்றனை யணைந்து சந்தத
மனங்கு ளிர்ந்திட விணங்கி வந்தரு
ளாய் மயிலே குயிலே யெழிலே
— மடவனநினதேரார், (5)

மடிக்கொரு வந்தன மடிக்கொரு வந்தனம்
வளைக்கொரு வந்தனம் விழிக்கொரு வந்தனம்
வா வெனுமோர் மொழியே சொலுநீ

மணங்கி ளர்ந்தந லுடம்பி லங்கிடு
மதங்கி யின்றுள மகிழ்ந்தி டும்படி
மான் மகளே யெனையா ணிதியே
— எனுமொழி பல நூறே, (6)

* மஞ்ஜுலம் = அழகு; வடசொல்.

படித்தவ டன்கைகள் பிடித்துமு னஞ்சொன
படிக்கும ணந்தரு ளளித்தவ னந்தகிர்
பா கரனே வரனே யரனே

படர்ந்த செந்தமிழ் தினஞ்சொ லின்பொடு
பதங்கு ரங்குந ருளந்தெ ளிந்தருள்
பா வகியே சிகியூ ரிறையே
— திருமலிசமரூரா, (7)

பவக்கட லென்பது கடக்கவு நின்றுணை
பலித்திட வும்பிழை செறுத்திட வுங்கவி
பா டவுநீ நடமா டவுமே

படர்ந்து தண்டயை நிதஞ்செ யும்படி
பணிந்த வென்றனை நினைந்து வந்தருள்
பா லனனே யெனையாள் சிவனே
— வளரயின்முருகோனே, (8)

## 3. நெய்

தந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் தனு தனு தனு தனு

தனதன தத்தத் தனதன தத்தத்
தனதன தத்தத் தனதன தத்தத்தா

தனதன தத்தத் தனத்தனு
தனதன தத்தத் தனத்தனு
தனதன தத்தத் தனத்தனு
தனதன தத்தத் தனத்தனு

தனனு தனனு தனனு தனனு
தனனு தனனு தனனு தனனு

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன தனதன தனனு
— தந்தன தன தானு.

வஞ்சஞ்சு தொன்றும்பேர் துன்பஞ் சங்கட மண்டும்பேர்
மங்கும் பேய் நம்பும்பேர் துஞ்சும் புன்சொல்வ ழங்கும்பேர்
மான் கணூர் பெணூர் தமர் லினுன்

மதியது கெட்டுத் திரிபவர் தித்திப்
பெனமது துய்த்துச் சுழல்பவ ரிச்சித்தே
மனமுயி ருட்கச் சிதைத்துமே
நுகர்தின துக்கக் குணத்தினோர்
வசையுறு துட்டச் சினத்தினோர்
மடிசொல மெத்தச் சுறுக்குளோர்
விலியே றியகூ ரமுளோர் குதவார்
நடுவே துமிலா ரிழிவார் களவோர்
மணமல ரடியிணை விடுபவர் தமையினு
நணுகிட வெனைவிடு வதுசரி யிலையே
தொண்டர்கள் பதிசேராய், (1)

விஞ்சுங்கார் நஞ்சந்தா னுண்டுந் திங்கள ணிந்துங்கால்
வெம்பும்போ தெரிசெந்தாள்கொண் டஞ்சஞ்சவுதைந்
மீன் பதா க்கையோன் மெய்வீ யுமா [தும்பூ
விழியைவி ழித்துக் கடுகவெ ரித்துக்
கரியையு ரித்துத் *தனுமிசை சுற்றிக்கோள்
விழைவறு சுத்தச் சிறப்பினோர்
பிணைமழு சுத்திக் கரத்தினர்
விஜயவு டுக்கைப் பிடித்துளார்
புரமெரி ரிக்கச் சிரித்துளார்

* தனுமிசை = தனுவில். தனு = உடம்பு.

விதிமா தவனு ரறியா வடிவோ
ரொருபா திபெணு யொளிர்வோர் சுசிநீள்
விடைதனி லிவர்பவர் பணபண மணிபவர்
கனைகழ லொலிதர நடமிடு பவர்சேம்
— என்றுளகுருநாதா, (2)

தஞ்சஞ்சேர் சொந்தஞ்சா லஞ்செம் பங்கய மஞ்சுங்கர
றந்தந்தா தந்தந்தா தந்தந் தந்தன தந்தந்தா
தாந் ததீ ததீ ததீ ததீ

(1) ததிமிதி தத்தித் தரிகிட தத்தத்
திரிகிட தத்தத் தெயெனந டிக்கச்சூழ்
தனிநட னக்ருத் தியத்தினுன்
மகிடனை வெட்டிச் சிதைத்துளாள்
தடமிகு முக்கட் கயத்தினுள்
சுரதனு வக்கப் பகுத்துளாள்

சமிகூ விளமோ டறுகா ரணிவா
ளொருகோ டுடையோ னனையாய் வருவாள்
சதுமறை களும்வழி படவளர் பவன்மலை
மகளென வொருபெய ருடையவள் சுதனே
— அண்டர்கடொழுதேவா, (3)

பிஞ்சஞ்சூழ் மஞ்சொண்சே யுஞ்சந் தங்கொள்ப தங்கங்கூர்
பிம்பம்போ லங்கஞ்சா ருங்கண் கண்களி லங்குஞ்சீ
ரோங் கவே யுலா வுகால் விஞ்ஞோர்

பிரமனெ டெட்டுக் குலகிரி திக்குக்
கரியொடு துத்திப் படவர வுட்கப்பார்

பிளிற நடத்திக் களித்தவா
கிரிகெட வெக்கித் துளைத்தவா
*பிரியக மெத்தத் தரித்தவா
தமியனை நச்சிச் ‡ சுளித்தவா

பிணமா முனமே யருள்வா யருள்வாய்
துனியா வையுறீ கடியாய் கடியாய்
பிசியொடு பலபிழை பொறுபொறுபொறுபொறு
சததமு மறைவறு திருவடி தரவா
— என்களிமுருகோனே. (4)

---

* பிரியகம் = கடம்பு. ப்ரியகமென்னும் வடசொல்லின் விகாரம்.

‡ சுளித்தல் = கோபித்தல்

## 4 சருக்கரை

தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன

தத்தன தனதன தனத்தனு
தனந்த தத்தன தனத்தனு
தத்தன தனதன தனத்தனு
தனந்த தத்தன தனத்தனு—தனதனதனதானு

மாத முந்தினம் வார முந்திதி
யோக மும்பல நாள்க ளும்படர்
மாதி ரந்திரி கோள்க ளுங்கழல்
பேணு மன்பர்கள் பான லந்தர

வற்சல மதுசெயு மருட்குணு
சிறந்த விற்பன ரகக்கணு
மூற்புய வசுரரை யொழித்தவா
வனந்த சித்துரு வெடுத்தவா

மால யன்சுரர் கோனு மும்பரெ
லாரும் வந்தன மேபு ரிந்திடு

வான வன்சுடர் வேல வன்குரு
ஞான கந்தபி ரானெ னும்படி

மத்தக மிசைமுடி தரித்தவா
குளிர்ந்த கத்திகை பரித்தவா
மட்டறு மிகலயில் பிடித்தவா
சிவந்த வக்கினி நுதற்கணு
— சிவகுருவெனுநாதா, (1)

நாத விங்கித வேத மும்பல்பு
ராண முங்கலை யாக மங்களு
நாத னுன்றனி வாயில் வந்தன
வேயெ னுந்துணி பேய றிந்தபி

னச்சுவ திவணெது கணித்தையோ
செறிந்த ஷட்பகை கெடுத்துமே
னட்புடை யருளமிழ் துணிற்சதா
சிறந்த* துத்தியை யளிக்குமே

---

* துத்தி = துய்ப்பன; ''சுணங்கும் பொறியுந்துய்ப்பனவுந் துத்தி'' என்பது சே-திவாகரம்

நாளு மின்புயர் தேனி னுஞ்சுவை
ஙீயும் விண்டல மேவ ருஞ்சுரர்
நாடி யுண்டிடு போஜ னந்தனி
லேயும் விஞ்சிடு மேக ரும்பொடு

நட்டமின் முப்பழ முவர்க்குமே
விளைந்த சர்க்கரை கசக்குமே
நற்சுசி முற்றிய பயத்தொடே
கலந்த புத்தமு தினிக்குமோ
— அதையினியருளாயோ, (2)

பூத லந்தனி லேயு நன்குடை
மீத லந்தனி லேயும் வண்டறு
பூம லர்ந்தவு ளுத வம்பத
நேய மென்பது வேதி னந்திகழ்

பொற்புறு மழகது கொடுக்குமே
யுயர்ந்த மெய்ப்பெயர் புணர்த்துமே
பொய்த்திட வினைகளை யறுக்குமே
மிகுந்த சித்திகள் பெருக்குமே

பூர ணந்தரு மேநி ரம்பெழி
லாத னந்தரு மேய ணிந்திடு
பூட ணந்தரு மேயி கந்தனில்
வாழ்வ துந்தரு மேயு டம்பொடு

பொக்கறு புகழினை யளிக்குமே
பிறந்து செத்திட ருலைக்குமே
புத்தியி லறிவினை விளக்குமே
நிறைந்த முத்தியு மிசைக்குமே
— இதைநிதமுதவாயோ, (3)

சீதளஞ்சொரி கோதில் பங்கய
மேம லர்ந்திடு வாவி தங்கிய
சீர டர்ந்தவி ராவி னன்குடி
யேர கம்பர பூத ரஞ்சிவ

சித்தரு முனிவரும் வசித்தசோ
லையுந்தி ரைக்கட லடிக்கும் வாய்
செற்கண முலவிடு பொருப்பெலா
மிருந்த ளித்தரு ளயிற்கையா

தேனு றைந்திடு கான கந்தனின்
மானி ளஞ்சுதை யாலி ருஞ்சரை
சேரு டம்புத ளாட வந்தசன்
யாச சுந்தர ரூப வம்பர

சிற்பர வெளிதனி னடிக்குமா
வகண்ட தத்துவ பரத்துவா
செப்பரும் ரகசிய நிலைக்குளே
விளங்கு தற்பர திரித்துவா
— திருவளர்முருகோனே, (4)

## 5. தேன்

தானதன தானன தானதன தானதன
தனதான தனதான தனதான தனதான
— தனதனதனதான

சூலதர னாட வோதிமக ளாடநனி
தொழுந்த கணமாட வரியாட வயனோடு
தூயகலை மாதாட மாநளினி யாடவுயர்
சுரரோடு சுரலோக பதியாட வெலியேறு

*சூகைமுக ஞராட மூரிமுக ஞடவொரு
தொடர்ஞாளி மிசையூரு மழவாட வசுவீர
சூலிபதி தாஞட நீலநம ஞடநிறை
சுசிநார விறையாட வலிசானி ருதியாட
— அரிகரமகஞேடே, (1)

காலிலியு மேயாட வாழ்நிதிய ஞடமிகு
கனஞால மகளாட †வரவேணி சசிதேவி
காமமத வேளாட மாமைரதி யாடவிர்
கதிராட மதியாட மணிநாக வரசோகை

காணுமுனி வோராட மாணறமி ஞடவிரு
கழலாட வழகாய தலையாட மணிமாசில்
கானமயி ருஞடஞானவயி லாடவொளிர்
கரவாள மதுவாட வெறிசூல மழுவாட
— வயிரமலெறுழோடே, (2)

*குகை = யானை. †வரவேணி = வரநதி — கங்கை.

கோலவரை ஞான்ற நூன்மரும மாடவிரை
கொளுநீப வணியாட வுடையாட வடனீடு
கோழியய ராதாட*வாகுவணி யாடமிளிர்
குழையாட வளையாட வுபயாறு கரமேசில்

கோநத மாராறெு டாறுவிழியாடமலர்
குழகாய விதழாட வொளிராறு சிரமோடு
கூறுகலை நாவாட மூரலொளி யாடவலர்
குவடேறு புயமாட மிடறுட மடியாட
— அகன்முதுகுரமோடே, 3)

நாலுமறை யேயாட மேனுதல்க ளாடவிய
னலியாத வெழிலாட வழியாத குணமாட
நாகரிக மேமேவு வேடர்மக ளாடவரு
ணயவானை மகளாட முசுவான முகனுட

* வாகு-பாஹு என்பதன் விகாரம் = தோள்

நாரதம கானுட‡வோசைமுனி யாடவிற
னவவீரர் புதராட வொருகாவ டியனுட
ஞானவடி யாராட மாணவர்க ளாடவிதை
நவிருச னுடனுட விதுவேளை யெணிவாகொள்
— அருண்மலிமுருகோனே (4)

பஞ்சாமிர்த வண்ண முற்றிற்று

---

‡ஓசை = சந்தம், திருப்புகழ்ச் சந்தங்களைப் பாடியருளிய அருணகிரிநாதரே "ஓசை முனி" எனப்பட்டனர்.

## திருச்செந்தூர், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பூஜா காலங்களின் பெயர் & நேரம்

| | | | |
|---|---|---|---|
| காலை நடை திறப்பு முற்பகல் மணி | | | 5—00 |
| பள்ளியறை தீபாராதனை காலை | | | 5—20 |
| விஸ்வரூபம் காலை | 5-30 | to | 6—00 |
| உதய மார்த்தாண்ட தீபாராதனை காலை | 6-30 | to | 7—00 |
| கால சந்தி 1, 2, 3 தீபாராதனை ஒத்தக்கட்டளை ஸ்ரீ பெலி | 8-00 | to | 9—00 |
| கலச பூஜை | 10-00 | to | 10—15 |
| உச்சிக்கால அபிஷேக துவக்கம் | | | 10—30 |
| உச்சிக்கால தீபாராதனை ஸ்ரீ பெலி | 11-30 | to | 12—00 |
| சாயரக்ஷை நடை திறப்பு: பிற்பகல் மணி | | | 5—00 |
| சாயரக்ஷை தீபாராதனை மாலை | 5-30 | to | 6—15 |
| அர்த்த ஜாம அபிஷேக துவக்கம் | | | 8—30 |
| அர்த்த ஜாம தீபாராதனை | 9-00 | to | 9—15 |
| ஏகாந்த தீபாராதனை ஸ்ரீ பெலி கற்பூரம் | 9-30 | to | 10—00 |
| பள்ளியறை தீபாராதனை | 10-00 | to | 10—30 |

மார்கழி மாதத்தில் திருப்பள்ளியெழுச்சியைமுன்னிட்டுக் காலை 3 மணிக்கு நடை திறந்து 8-30 மணிக்கு நடை சாத்தி மாலை 3 மணிக்கு நடை திறந்து இரவு 8-30 மணிக்கு நடை சாத்தப்படும்.

## தினசரி கீழ்க்கண்ட காலங்களில் மட்டும் அர்ச்சனை நடைபெறும்

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 7-00 மணி முதல் | 8-00 மணி வரை | | |
| ,, | 9-00 ,, | 10-00 ,, | | |
| ,, | 11-00 ,, | 11-45 ,, | | |
| மாலை | 6-30 ,, | 8-00 ,, | | |
| இரவு | 9-00 ,, | 9-30 ,, | | |

## திருக்கோயில் கட்டண வசூல் விபரம்

| | | |
|---|---|---|
| அஷ்டோத்திர அர்ச்சனை டிக்கட் 1-க்கு | ரூ. | 1—00 |
| சகஸ்ர நாமம் அர்ச்சனை டிக்கட் 1-க்கு | ரூ. | 2—00 |
| ஸ்பெஷல் தங்க அங்கிகள் சாத்த கட்டணம் | ரூ. | 25—00 |
| காவடி 1-க்கு<br>தேவஸ்தானம் ரூ. 3—00<br>திருப்பணி ரூ. 2—00 | ரூ. | 5—00 |
| பால்குடம் 1-க்கு<br>தேவஸ்தானம் ரூ. 1 00<br>திருப்பணி ரூ. 0—50 | ரூ. | 1—50 |
| பன்னீர் பாட்டில் 1-க்கு | ரூ. | 1—25 |
| முடி காணிக்கை 1-க்கு | ரூ. | 1—25 |
| காது குத்து 1-க்கு | ரூ. | 0—75 |
| கல்யாண அனுமதிக் கட்டணம் | ரூ. | 5—00 |

| | | |
|---|---|---|
| விபூதி அபிஷேகம் 1-க்கு | ரூ. | 1—00 |
| தாராபிஷேக அனுமதிக் கட்டணம் | ரூ. | 1—00 |
| தாரா ஓமம் | ரூ. | 5—00 |
| சங்காபிஷேகம் | ரூ. | 15—00 |
| லட்சார்ச்சனை | ரூ. | 100—00 |
| பாக்கு வைப்பு | ரூ. | 1—00 |
| காசி கங்கை அபிஷேகம் | ரூ. | 0—25 |
| சந்தனாதி தைலம் படி 1-க்கு | ரூ. | 8—00 |
| விபூதி பாக்கட் 1-க்கு | ரூ. | 0—25 |
| புளியோதரை கட்டி 1-க்கு | ரூ. | 0—40 |
| தயிர்ச் சாதம் கட்டி 1-க்கு | ரூ. | 0—30 |
| உச்சிக்கால பலகார செட் 1-க்கு | ரூ. | 1—00 |
| சாயரட்சை பலகார செட் 1-க்கு | ரூ. | 1—00 |
| ஆறுமுக அர்ச்சனை | ரூ. | 30—00 |
| விசேஷ நாட்களிலும் உற்சவ காலங்களிலும் நாழிக் கிணற்றில் இறங்கி ஸ்நானம் செய்ய விரும்புகிற நபர் 1-க்கு | ரூ. | 0—10 |

மணியடியில் நின்று

| | | |
|---|---|---|
| ,, தரிசனம் செய்ய நபர் 1-க்கு | ரூ. | 1—00 |
| ,, அர்ச்சனை செய்ய நபர் 1-க்கு | ரூ. | 2—00 |
| ,, அபிஷேகம் பார்க்க நபர் 1-க்கு | ரூ. | 3—00 |

## திருக்கோயிலில் நடத்தப்பட்டு வரும் யாத்ரீகர்கள் தங்குவதற்கான இடங்களும் அவைகளின் வாடகை விபரமும்:

| விபரம் | எண்ணம் | | ரூம் ஒன்றுக்கு நாள்வாடகை |
|---|---|---|---|
| ஆறுமுக விலாஸ் விடுதி | 6 | ரூ. | 7—50 |
| தேவஸ்தான ரெஸ்ட் ஹவுஸ் | 3 | | |
| (பெரிது) | | ரூ. | 6—00 |
| (சிறிது) | | ரூ. | 4—00 |
| செந்திலாண்டவன் விடுதி | | | |
| [1] "A" வகுப்பு | 4 | ரூ. | 6—00 |
| [2] "B-1" ,, | 28 | ரூ. | 4 & 3—50 |
| [3] "B-2" ,, | 25 | ரூ. | 3 & 2—50 |
| [4] "C" ,, | 15 | ரூ. | 1—50 |
| ஷண்முகவிலாஸ் விடுதி | 25 | | |
| ,, (பெரிது) | | ரூ. | 1—50 |
| ,, (சிறிது) | | ரூ. | 1—00 |
| வசன அறை | | ரூ. | 0—50 |
| வீரவாகுதேவ விலாசம் | 2 | ரூ. | 1—00 |

| | | |
|---|---|---|
| பொது அறை-பக்த கோடிகளின் சாமான்களைப்பாதுகாக்கும் லாக்கர் வசதிக்கு | ரூ. | 0 - 35 |
| பாத்திரம் டிப்பாஸிட் | ரூ. | 5 00 |
| பூட்டு டிப்பாஸிட் | ரூ. | 11 – 00 |
| ரிசர்வேஷன் பீஸ் | ரூ. | 1 – 00 |

**N. B:** *1.* ரூம்களுக்கான மனுக்கள் ரூ. 1 பதிவுக் கட்டணத்துடன் அனுப்பினால் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

*2.* யாத்ரீகர்கள் வசதியை முன்னிட்டு தினமும் காலை நேரங்களில் தேவஸ்தான சத்திரத்தில் வைத்து தயிர்சாத பொட்டணங்களும் புளியோதரை பொட்டணங்களும் விற்கப்படுகின்றன.

# திருக்கோயில் வெளியீடுகளின்

## விலை விபரம்

| | ரூ. | பை |
|---|---|---|
| திருச்செந்தூர் ஸ்தல புராணம் | 5 | 00 |
| திருச்செந்தூர்க் கோவை | 1 | 25 |
| இலை விபூதி மகிமை | 0 | 15 |
| செந்திற் குமரன் பாமாலைகள் | 0 | 15 |
| சுப்பிரமணியபுஜங்கம் (சுவாமி படத்துடன்) | 0 | 20 |
| திருப்பாவை வியாக்பாதங்கள் | 2 | 50 |
| திருச்செந்தூர் கோயில் கும்பாபிஷேக மலர் புகைப்படத்துடன் | 1 | 00 |
| திருவேரகம் ஸ்ரீ சுவாமிநாத சுவாமி பிள்ளைத் தமிழ் | 1 | 05 |
| திருச்செந்தூர் வள்ளிநாயகி பிள்ளைத்தமிழ் | 0 | 50 |
| திருச்செந்தூர் நிரோட்டக யமக அந்தாதி | 0 | 50 |
| திருச்செந்தூர் நொண்டி நாடகம் | 0 | 60 |

| | | |
|---|---|---|
| *திருமுருகாற்றுப்படை (184 பக்கங்கள் அடக்கவிலைப் பதிப்பு)* | *0* | *50* |
| *தண்டபாணி சுவாமிகள் அருளிச்செய்த திருச்செந்திற் பிரபந்தங்கள் (580 பக்கங்கள் அடக்கவிலைப் பதிப்பு)* | *2* | *00* |
| *திருச்செந்திற் குறவஞ்சி* | *0* | *05* |
| *திரு அம்பர்ப் புராணம்* | *5* | *00* |
| *திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு* | *15* | *00* |
| **"Sea-shore Temple of Lord Subramanya"** *(அச்சில்)* | | |
| *நவக்கிரகங்களின் படங்கள்* | *0* | *50* |

## நாள்தோறும் அடியிற் குறித்த நேரங்களில் இவைகளை ஓதிப் பயன் பெறுங்கள்

### 1. காலை எழுந்தவுடன்:

''காலையி லெழுந்துன் நாமமே மொழிந்து
காதலுமை மைந்த-எனவோதிக்
காலமு முணர்ந்து ஞானவெளி கண்கள்
காண அருள் என்று பெறுவேனோ?''

''தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லழுந்த வுரைசெய வருமுக நகையொளி
தழைந்த நயனமும் மிருமலர் சரணமு-மறவேனே!''

### 2. வழிபாடு தொடங்கும் போது:

''உம்பர்கள் சுவாமீ நமோநம
எம்பெருமானே நமோநம
ஒண்டோடி மோகா நமோநம-எனநாளும்''
''உன்புகழே பாடி நானினி
அன்புடன் ஆசார பூஜைசெய்
துய்ந்திட வீணாள் படாதருள்-புரிவாயே''

### 3. வெளியே புறப்படும்போது:

''சேயவன் புந்தி வனவாச
மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா
சராந்தக சேந்த வென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு
வெள் ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற
வேதருஞ் சேதமின்றே''

4. ஒரு கருமம் தொடங்கும்போது:

''நிகழ்த்தும் ஏழ்பவ கடற்சூறை யாகவே
எடுத்த வேற்கொடு பொடித்தூள தாயெறி
நினைத்த காரியம் அனுக்கூலமே புரி-பெருமானே''

5. சாப்பிடும்போது:

''அருமறைகளே நினைந்து மனு நெறியிலே
நடந்து அறிவை அறிவாலறிந்து நிறைவாகி''

''அகில புவனாதி யெங்கும்
வெளியுற மெய்ஞ் ஞான இன்ப
அமுதை யொழி யாதருந்த அருள்வாயே!''

6. இரவில் விளக்கு ஏற்றும்போது:

''மோகாந்த காரம் தீர்த்து
வேதாந்த தீபம் காட்டி-அருள்வாயே!''

''தீபமங்கள ஜோதீ நமோ நம
தூய அம்பல லீலா நமோ நம
தேவகுஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய்''

7. இரவில் படுக்கும்போது:

'இரவினிடை துயிலுகினும்
யாரோடு பேசுகினும்
இளமையுமு னழகுபுனை
ஈராறு தோள் நிரையும்
இருபதமும் அறுமுகமும்
யானோத ஞானமதை அருள்வாயே!''

---

ஸ்ரீ ஆனந்த விநாயகர் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். போன்: 50

## தர்மகர்த்தர்கள் குழு:-

திரு. சிவ. ராம. அ. நடராஜ முதலியார்
(தலைவர்) அவர்கள்

திரு. எஸ். கணேச நாடார், B. A., அவர்கள்

திரு. எஸ். கே. இராமச்சந்திர தேவர், அவர்கள்

திரு. ஆ. நல்லகண்ணு, அவர்கள்

திரு. ஏ. சின்னஅழகிரிசாமி நாயுடு, அவர்கள்

கி. சிதம்பரம், B. A.,
நிருவாக அதிகாரி.

*20—10—1969.*

தர்மகர்த்தர்கள் குழு:-

திரு. சிவ. ராம. அ. நடராஜ முதலியார்
(தலைவர்) அவர்கள்

திரு. எஸ். கணேச நாடார், B. A., அவர்கள்

திரு. எஸ். கே. இராமச்சந்திர தேவர், அவர்கள்

திரு. ஆ. நல்லகண்ணு, அவர்கள்

திரு. ஏ. சின்னஅழகிரிசாமி நாயுடு, அவர்கள்

கி. சிதம்பரம், B. A.,
திருவாக அதிகாரி.

20—10—1969.

## வேண்டுகோள்

ஒவ்வொரு தமிழ் மாதத்திலும் வருகிற கிருத்திகை நாள்தோறும் 108 திருவிளக்கு பூஜை நடத்த ஒரு கிருத்திகைக்கு ரூ 150/- வீதம் செலவு ஆகிறது.

இதற்காகும் செலவை ஏற்றுக் கொள்ள முன் வருபவர்கள் எண்டோமெண்ட் நிதியாக ரூ 2000/- உபயமாக தேவஸ்தானத்தில் செலுத்தவும் அந்த நிதியின் முதலீட்டிலிருந்து வரப்பெறும் வட்டித் தொகையிலிருந்து திருவிளக்கு பூஜை தொடர்ந்து நடைபெறவும் தேவையான நிதியைத் தந்து திருச் செந்திலாண்டவன் திருவருள் பெற்றுய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

ஆலய நிருவாகிகள்